European Union

**ஊடக வெளியீடு**

**ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து இலங்கைக்கு ரூ. 8.26 பில்லியன் நன்கொடை உதவி**

*நீதி, உணவு பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத் தணிப்பு பணிகளுக்கு உதவும் வகையில் பங்களிப்பு*

*கொழும்பு, 13 ஜனவரி 2021* - இலங்கையின் நீதித் துறை, உணவுப் பாதுகாப்பு மேம்படுத்தல் மற்றும் காலநிலை மாற்றத் தணிப்பு பணிகளுக்கு உதவும் வகையில் 35.75 மில்லியன் யூரோக்களை (8.26 பில்லியன் ரூபாய்) வழங்குவதற்கான மூன்று புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆடிகல கைச்சாத்திட்டிருந்ததுடன், இந்நிகழ்வில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் தூதுவர் டெனிஸ் சைபி பங்கேற்றிருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் தொடர்ச்சியாக வழங்கப்படும் ஆதரவுக்கும், நெருக்கமான ஒன்றிணைந்த செயற்பாடுகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு திறைசேரியின் செயலாளர் நன்றி தெரிவித்ததுடன், இந்த நன்கொடைகளினூடாக, அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நீதித் துறையை வலிமைப்படுத்தும் பணிகள், இலங்கையினால் வெளியிடப்படும் பச்சையில்ல வாயு வெளியேற்றங்களை குறைப்பது மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தி, ஏற்றுமதிக்கு இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் தர மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமைந்திருக்கும் என்றார்.

தூதுவர் சைபி கருத்துத் தெரிவிக்கையில், "மூன்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை இலக்காகக் கொண்டு இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவியாக இந்த மூன்று நன்கொடைகளும் அமைந்துள்ளன. கொரோனாவைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக இலங்கை மக்களுக்கு நீதியை உரிய காலத்திலும், வினைத்திறன் வாய்ந்த முறையிலும், நேர்மையான வகையிலும் பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தை பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. உணவு பாதுகாப்பை மேம்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளதனூடாக, உற்பத்தியாளர்களும், நுகர்வோரும் பயன் பெறுவார்கள் என்பதுடன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இதர சந்தைகளுக்கு சேதன விவசாய உற்பத்திகளை ஏற்றுமதியை ஊக்குவிப்பதாகவும் அமைந்திருக்கும். காலநிலை மாற்றம் காரணமாக எழுந்துள்ள பொதுவான சவால்களை எதிர்கொள்வது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியமும், இலங்கையும் இணைந்து பணியாற்றும்." என்றார்.

நீதித் துறைக்கு உதவும் வகையிலான 18 மில்லியன் யூரோக்கள் (ரூ. 4.16 பில்லியன்) பெறுமதி வாய்ந்த திட்டமானது, சம்பந்தப்பட்ட தரப்பினர் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்த ஆலோசனைகளின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. திறன் கட்டியெழுப்பல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக் கொடுப்பதில் இந்தத் திட்டம் கவனம் செலுத்தும். நீதியை பெற்றுக் கொள்வதற்கு வினைத்திறன் மற்றும் பயன்பாட்டை அதிகரிப்பது, நீதிமன்றங்களில் காணப்படும் வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பது, குறிப்பாக நீதியை பெற்றுக் கொள்வதற்கான அணுகலை மேம்படுத்துவது போன்றன பிரதான இலக்காக அமைந்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் போன்றன முன்னெடுக்கும்.

10 மில்லியன் யூரோக்களினூடாக (அண்ணளவாக 2.31 பில்லியன் இலங்கை ரூபாய்) உணவு பாதுகாப்பு, தரம் மற்றும் சேதன விவசாயத்தை மேம்படுத்த உதவிகள் வழங்கப்படும். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உணவு விவசாய ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் தொழிற்துறை அபிவிருத்தி நிறுவனம் ஆகியன இணைந்து ஈடுபடும். சிறந்த விவசாய மற்றும் தூய்மை செயன்முறைகளை பின்பற்றுவதனூடாக, விவசாயத் துறையின் போட்டிகரத் தன்மையை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன், இடர் அடிப்படையிலான உணவுக் கட்டுப்பாட்டு கட்டமைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட நுகர்வோர் விழிப்புணர்வையும் கொண்டிருக்க முடியும். நடைமுறைப்படுத்தும் பங்காளரான GIZ (ஜேர்மனி) ஊடாக சிறிய, நடுத்தரளவு வியாபாரங்கள் அடங்கலாக உள்நாட்டு சேதன சந்தைகளுக்கு உயர் அளவுகளில் சிறந்த தரம் வாய்ந்த உற்பத்திகளை மேற்கொள்ள உதவிகள் வழங்கப்படும். தேசிய சேதன கட்டுப்பாட்டு ஒன்றியம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை போன்றவற்றினூடாக பிரதான ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளை அணுகுவதற்கு அவசியமான நியமங்கள் ஊக்குவிக்கப்படும்.

இலங்கையில் போட்டிகரத்தன்மையான, வளச் சிக்கனமான, குறைந்த காபன் வெளியீட்டைக் கொண்ட மற்றும் காலநிலைக்கு உகந்த தொழிற்துறையை கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படும் பணிகளுக்கு சூழல், வலு மற்றும் தொழிற்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கோரிக்கைக்கமைய, 7.75 மில்லியன் யூரோக்கள் (ரூ. 1.79 பில்லியன்) பெறுமதியான

European Union

நன்கொடையினூடாக, தொழிற்துறையிலிருந்து பச்சைஇல்ல வாயுக்கள் வெளியீட்டை குறைப்பது தொடர்பான திட்டம் ஐக்கிய நாடுகள் தொழிற்துறை அபிவிருத்தி நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும். பாரிய, நடுத்தரளவு மற்றும் சிறிய தொழிற்துறைகளுக்கு தமது சூழல் ஒழுக்கத்தை மேம்படுத்தி காபன் வெளியீட்டை குறைக்க உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன், காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்காக பாரிஸ் உடன்படிக்கையில் வழங்கப்பட்ட சர்வதேச அர்ப்பணிப்புகளை எய்துவதற்கு அரசாங்கத்துக்கு உதவியாகவும் அமைந்திருக்கும்.

###.